***IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE, KARUR.***

***MCOP.NO.126/ 2020***

*Deposition of PW - 1 solemnly affirmed by S.Vidya Priya, Bench Clerk Grade-II of this court on 21.07.2026 in accordant with provisions of XLIV of 1989.*

| | | | | | |
|---|---|---|---|---|---|
| *Name* | : | சிவா | *Age* | : | |
| *Father's Name* | : | துரை | *Village* | : | |
| *Calling* | : | | *Taluk* | : | |

**முதல் விசாரணை**

நான் இம் மனுவின் மனுதாரர் ஆவேன். எனது சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். எனது தரப்பு சான்றாவணங்களை தாக்கல் செய்கிறேன்.

| வ.எண். | தேதி | ஆவணம் | ஆவணத்தின் தன்மை |
|---|---|---|---|
| ம.சா.ஆ.1 | | முதல் தகவல் அறிக்கை | பதிவிறக்க நகல் |
| ம.சா.ஆ.2 | | காயச்சான்றிதழ் | பதிவிறக்க நகல் |
| ம.சா.ஆ.3 | | மோட்டார் வாகன ஆய்வறிக்கை | பதிவிறக்க நகல் |
| ம.சா.ஆ.4 | | மாதிரி வரைபடம் | பதிவிறக்க நகல் |
| ம.சா.ஆ.5 | | குற்ற அறிக்கை | பதிவிறக்க நகல் |
| ம.சா.ஆ.6 | | சிகிச்சை விவரக்குறிப்பு | அசல் |
| ம.சா.ஆ.7 | | மருத்துவ பில்கள் (ரூ.2,34,386/-) | எதிர் தரப்பு ஆட்சேபனையுடன் அசல் |
| ம.சா.ஆ.8 | | ஆதார் அட்டை | அசலுடன் ஒப்பிட்டு பார்க்கப்பட்ட நகல் |

**2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

விபத்துசமயத்தில் நான் பல்சர் இரண்டு சக்கரவாகனத்தில் பயணம் செய்தேன். மூன்று நபர்கள் பயணம் செய்தோம். கரிகாலன் என்ற நபர் இரு சக்கர வாகனத்தை ஓட்டினார். விபத்து சம்பந்தமாக அவர்தான் புகார் கொடுத்தார். நான் 3வது நபராக அமர்ந்துபயணம் செய்தேன். திருச்செங்கோடு அர்த்தநாரீஸ்வரன்கோவிலுக்கு சென்றுவிட்டு திரும்பி வரும்போது விபத்து ஏற்பட்டது. கரிகாலன் என்பவருக்கு

ஓட்டுநர் உரிமம் உள்ளது. அவ்வாறு ஓட்டுநர் உரிமம் இல்லை என்றால் சரியல்ல. நான் பயணம் செய்த வாகனம் மோட்டார் வாகன ஆய்விற்கு உட்படுத்தப்பட்டதா என்று எனக்கு தெரியாது. அந்த மோட்டார் வாகன ஆய்வறிக்கையை நான் வேண்டும் என்றே தாக்கல்செய்யவில்லை என்றும், அதை தாக்கல் செய்தால் நான் பயணம் செய்தவாகனத்திற்கு காப்பீடு இல்லை என்பது தெரிய வரும் என்பதாலும், ஓட்டுநருக்கு ஓட்டுநர் இல்லை என்பதாலும் அவ்வாறு தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

விபத்து மாலை 5 மணிக்கு நடைபெற்றது. விபத்து நடைபெற்ற சாலையானது திருச்செங்கோட்டிலிருந்து கபிலர்மலை செல்லும் சாலையாகும். அந்த சாலை எந்த திசையில் உள்ளது என்றும், சாலையின் அகலம் எவ்வளவு என்றும் தெரியாது. எனக்கு வலது காலில் மட்டும் காயம் ஏற்பட்டது என்றால் சரிதான். பல்சர் வாகனம் அதிவேகமாக செல்லக்கூடிய வாகனம் என்றால் சரிதான். எதிரில் வந்த வாகனத்தை எவ்வளவு தொலைவில் பார்த்தேன் என்று ஞாபகம் இல்லை. இரண்டு சக்கர வாகனத்தை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டி வந்த நபர்தான் சாலை விதிகளை பின்பற்றாமல் சாலையின் வலது பக்கத்தில் ஏறி விபத்தை ஏற்படுத்திக் கொண்டார் என்றால் சரியல்ல.

எங்களுடைய வாகனத்திற்கு எந்தவிதமான ஆவணங்களும் இல்லை என்பதால் எதிரில் வந்த வாகனத்தின் மீது தவறாக புகார் கொடுத்து வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது.என்றால் சரியல்ல. நான் விபத்துசமயத்தில் பாரத் பாலிடெக்னிக் கல்லூரியில் 2-ம் ஆண்டு படித்துவந்தேன். நான் Diplomo in EEE முடித்துள்ளேன். நான் படிக்கும்போதே பகுதி நேர வேலைக்கு சென்று சம்பாதிப்பதாக தவறாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் கணினி பயின்றதற்கான ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை. நான் ராஜ் ஆர்த்தோ மருத்துவமனையில் 7 நாட்கள் உள்நோயாளியாக சிகிச்சை பெற்றேன் என்றால் சரிதான். நான் தாக்கல்செய்துள்ள ம.சா.ஆ.6 சிகிச்சை விபரக்குறிப்பில் எனக்கு வலது காலில் எந்தவிதமான நரம்பு பாதிப்பு ஏற்படவில்லை என்று மருத்துவர் சான்று கொடுத்துள்ளார் என்றால் சரிதான். நான் பூரண குணமான பின்புதான் மருத்துவ மனையிலிருந்து விடுவிக்கப்பட்டேன் என்றால் சரியல்ல. நான் ஊன்றுகோலுடன்தான் சிகிச்சை முடிந்துவெளியேறினேன்.

11.07.2020-க்கு பின்னிட்டு சிகிச்சை பெற்றதற்கான ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை. ம.சா.ஆ.7 மருத்துவ செலவு ஆவணங்கள் இந்த வழக்கிற்காக மிகைப்படுத்தி தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. எனக்கு எந்தவிதமான உடல்ஊனமும், வருமான இழப்பும் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. எதிர்கால மருத்துவ செலவுகள் ரூ.2 லட்சம் ஆகும் என்று வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. என்னால் நீண்ட நேரம் உட்காரவோ, நிற்கவோ, சம்மணம் போட்டு உட்காரவோ முடியாது என்றும், எலும்பு முறிவு கூடவில்லை என்றும் வழக்கிற்காக தவறாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. விபத்திற்கு இருசக்கர வாகன ஓட்டுநர்தான் காரணம் என்பதால் இந்த எதிர்மனுதாரரைப் பொருத்து மனு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால்சரியல்ல.

| | |
|---|---|
| | சாட்சி கூறிய சாட்சியத்தை எதிரியின் முன்னிலையில் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் சாட்சியிடம் படித்துக் காட்டி சரியாக உள்ளது என்று ஒப்புக் கொண்டு சாட்சியால் கையெழுத்திடப்பட்டது.<br>(ஓம்.என்.எஸ்.ஜெயபிரகாஷ்)<br>தலைமை குற்றவியல் நடுவர்<br>கரூர் |